# மின்வாரியத்தில் 'அப்ரண்டிஸ்' பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

**பொள்ளாச்சி, அக். 11–**

காடம்பாறை மின்வாரியத்தில், தொழில் பழகுனர் பயிற்சிக்கு (அப்ரண்டிஸ்), ஆள் எடுக்கப்படுகிறது; ஐ.டி.ஐ., பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

காடம்பாறை மின் உற்பத்தி நிலையத்துக்கு உட்பட்ட, அனைத்து மின்நிலையங்களுக்கும், தொழில் பழகுனர் பயிற்சிக்கு (அப்ரண்டிஸ்), நிலையில் ஆள் எடுக்கப்படுகிறது.

எலக்ட்ரீசியன், ஒயர்மேன், பிட்டர், வெல்டர் மற்றும் கணினி இயக்குபவர் பிரிவுகளில் ஐ.டி.ஐ., பயின்று தேறியவர்கள், இப்பயிற்சி பணியிடத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்னகா நேர்காணல் வரும், 27ம் தேதி காலை, 10:30 மணிக்கு, பொள்ளாச்சி – வால்பாறை ரோடு, அட்டகட்டி காடம்பாறை மின்உற்பத்தி வட்ட மத்திய அலுவலகத்தில் நடக்கிறது.

தகுதியுள்ளவர், தொழிற்பயிற்சி அசல் சான்றிதழ், தேசிய தொழில்நுட்ப அசல் சான்றிதழ், பிறந்த தேதிக்கான அசல் சான்றிதழ், ஜாதிச்சான்று, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த அட்டை மற்றும் அசல் ஆதார் அட்டை ஆகியவற்றை நேர்காணலில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஏற்கனவே 'அப்ரண்டிஸ்' பயிற்சி முடித்து சான்று பெற்றவர்கள், நேர்காணலுக்கு வர வேண்டாம். தேர்வு செய்யப்பட்டால், ஒரு ஆண்டு காலத்துக்கு, ஊக்கத்தொகையாக மாதம், 7,709 ரூபாய் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு, 94450 72286 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இத்தகவலை, காடம்பாறை மின் உற்பத்தி வட்ட மேற்பார்வை பொறியாளர் ரபீக் அகமது அறிவித்துள்ளார்.